<u>**முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்**</u>

<u>**M.C.O.P.No.124/2022**</u>

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. 1 |
| பெயர் | .. செந்தமிழ் |
| தகப்பனார் / கணவர் | .. ஜெயபிரகாஷ் |
| வயது | .. 29 |
| தொழில் | .. |
| கிராமம் | .. அனக்காவூர் |
| தாலுக்கா | .. செய்யாறு |

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் நாள் வெள்ளிக்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

<u>**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்த ஜெயபிரகாஷ், சகோதரர் பாண்டுரங்கன் தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். ஆனால் அவரும் சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் சமயத்தில் காரில் எத்தனை பயணம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி வாகனத்தில் அனுமதிக்கப்பட்ட 5 நபர்களுக்கு மேல், 6 நபர்கள் பயணம் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தில் அனுமதிக்கப்பட்ட 5 நபர்களுக்கு மேல், 6 நபர்கள் பயணம் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்பதால் 3ம் தரப்பினர் இல்லாத காரணத்தால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைபட்டவர் இல்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தவர் என் கணவர் ஆவார். நானும், என்

கணவரும் 7 வருடங்களுக்கு மேலாக சேர்ந்து வாழ்ந்து வருகிறோம். வாரிசு சான்றிதழ் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், எனக்கும், என் மாமியார் புனிதாவிற்கும் பிரச்சனை என்பதால் வாரிசு சான்றிதழ் வாங்க இயலவில்லை. நான் விபத்தில் இறந்த ஜெயபிரகாஷ் என்பவருக்கு மனைவி இல்லை என்றாலும், அதனால் தான் வாரிசு சான்றிதழ் வாங்க இயலவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. நான் இறந்த ஜெயபிரகாஷ் என்பவரின் வாரிசு இல்லை என்பதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**